அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண்: 55 /2017
தேதி: 05.05.2017

**தமிழ்நாடு முழுவதும் தொடரும் மருத்துவர்கள் போராட்டம்.**
**நோயாளிகளையும், மருத்துவர்களையும் பாதிக்காத வகையில்**
**சுமூக தீர்வு காணவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

மருத்துவ மேற்படிப்புக்கான 50% இடஒதுக்கீடு, நீட் தேர்விலிருந்து விலக்கு போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள், மற்றும் மருத்துவ மாணவர்களால் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றுவரும் போராட்டங்களால் நோயாளிகள், குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்போராட்டத்தின் தாக்கம் கிராமப்புறங்களில் பெரிய அளவில் காணப்படுவதாக தெரிகிறது.

மருத்துவர்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருந்தாலும், இந்த போராட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படுவது ஏழை பொதுமக்கள்தான். சேவை மனப்பான்மையோடு பணியாற்றும் மருத்துவர்கள், உயிரிழப்புகளை தடுப்பதற்கு, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மருத்துவர்களும், மருத்துவர்கள் நலனை கருத்தில் கொண்டு மாநில அரசும் செயல்படவேண்டும்.

மேலும், நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும், மருத்துவர்களுக்கும், பாதிப்பு ஏற்படாதவகையில், இந்த போராட்டத்திற்கு சுமூகமாக தீர்வுகண்டால் நலமாக இருக்கும்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர் சரத்குமார்**
நிறுவனர் - தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com